**cross**

**O.S.No. 16/2015**

**Date:11.09.2025**

**பி.வா.சா 1. மகேஷ்வரி**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் காந்தி நகர் 1ம் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள உறுதிக் கூற்றில் காஞ்சிபுரத்தில் குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் நான் அங்கு கல் உடைக்கும் வேலை செய்து வருவதால் அந்த முகவரியை கொடுத்துள்ளேன். ஆனால் என்னுடைய முகவரி காந்திநகர். நான் காந்திநகர் 1ம் தெருவில் நிரந்தரமாக குடியிருந்து வருவதை காட்டக்கூடிய ஆதாரோ அல்லது வாக்காளர் அடையாள அட்டையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து காந்தி நகர் 1ம் தெருவில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கு சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் மறந்து விட்டது. தாவா சொத்தின் எல்லைகள் தெரியுமா என்றால் தாவா சொத்திற்கு கிழக்கே குணசீலன், மேற்கே சங்கர் ராஜ், மகேஷ்வரி, வடக்கே மோகன், தெற்கே சீதன். தாவா சொத்தின் கிழமேல் அளவுகள், தென்வடல் அளவுகள் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்உரையில் தாவா சொத்து ஆதியில் புன்னையாவு என்ற பூரண மரியாளுக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படியார்களிடம் இருந்து யார் கிரையம் பெற்றார்கள் என்று தெரியாது. மேற்படி தாவா சொத்து ஆதீயில் யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பது எனக்கு தெரியாது. மோகன் தகப்பனார் பெயர் சண்முகம். சண்முகத்தின் மனைவி பெயர் சொர்ணத்தம்மாள். அவர்களுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 ஆண்மக்கள் 3 பெண்மக்கள் உள்ளார்கள். அவர்களின் பெயர்கள் பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் அவர்கள் எப்படி பிரித்துக்கொண்டார்கள் என்று எனக்கு நேரில் தெரியாது. இந்த வழக்கு கொடுத்த வாதியின் தகப்பனார் சண்முகம் காணாமல் போய்விட்ட விபரம் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 15.12.2014ம் தேதியில் சார்லஸ் என்பர் எனக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம். அந்த சார்லஸ் மோகன் தாஸ் என்பவரின் மகன் என்றால் சரிதான்.

மேற்படி சார்லஸ்க்கு தாவா சொத்து எப்படி கிடைத்தது என்று தெரியுமா என்றால் அவரது பாட்டி சொர்ணம்மாள் அவர்களுக்கு எழுதி கொடுத்தார்கள். மேற்படி சொர்ணம்மாள் மேற்படி சார்லஸ்க்கு எப்படி எழுதி கொடுத்தார் என்று தெரியுமா என்றால் என்ன ஆவணம் என்று தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சார்லஸ் எனக்கு கிரையம் எழுதி கொடுக்கும் போது சுயர்ஜிதமாக பாத்தியப்பட்டது என்று கண்டு எழுதி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.2 சார்லஸ்க்கு சொர்ணம் எழுதி கொடுத்த ஆவணத்தில் தனக்கு மேற்படி சொத்து பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்று எழுதி கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.5 1ம் பிரதிவாதி மற்றும் பெற்றோர்கள், சகோதரர்கள் பிறப்பித்துக் கொண்ட பதிவில்லா கிரைய ஒப்பந்தம் மேற்படி குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.5ல் 1ம் பிரதிவாதி வகையறாக்கள் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தம் பூர்வீக சொத்துக்கள் என்பதால் வாதிகளின் உரிமையை பாதிக்ககூடியது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5ன்படி மேற்படி ஆவணத்தை வழக்கிற்காக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 1ம் பிரதிவாதி என்பவர் தர்மராஜ் என்பவருக்கு பிறப்பித்துக் கொடுத்த பதிவில்லா பணப்பற்று ரசீது இவ்வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பொதுகுடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தை பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் சார்லஸ் எழுதி கொடுத்த ஆவணம் மோசடியானது மற்றும் ஊர்ஜீதத்திற்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நானும், சார்லசும் சேர்ந்து வாதிகளின் உரிமையை மோசடி செய்ய வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1படி மேற்படி கிரையம் பெற்ற சொத்தை நான் எந்த காலத்திலும் நான் ஆண்டு அனுபவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சண்முகம் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பே காணாமல் போய்விட்ட பிறகு அவரது கையெழுத்தை சிருஷ்டனை செய்து பி.வா.சா.ஆ.5 ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகளின் பிராதில் கோரியுள்ள படி பங்கு பாகம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.